**சமூகக்கட்டமைப்பும், மாற்றமும், அபிவிருத்தியும், காத்தாங்குடிப்பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு**

வே. குணரத்தினம் &
செல்வி. எஸ். சித்தி ஜிமிரியா
சமூக விஞ்ஞானத்துறை
கிழக்குப்பல்லைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் எந்தவொரு சமூகமும் ஏதோ ஒரு வகையில் சமூகம் ஒரு கட்டுக்கோப்பான முறையில் ஒரு ஒழுங்கமைப்புக்குள் செயற்படுவதற்கும் சீரான செயற்பாட்டிற்கும் சமூகம் சீர்குலைவு ஏற்படாது தவிர்ப்பதற்கும் அவசியமாகின்றது. எந்தவொரு சமூகக்கட்டமைப்பிலும் அக்கட்டமைப்பின் பிரதான அம்சங்களாக அல்லது கூறுகளாக பண்பாடு சமூக நிறுவனங்களும் காணப்படுகின்றன. இவ்விரு கூறுகளின் அம்சங்களே சமூகக்கட்டமைப்பைப் பேணிப்பாதுகாக்கின்றன. எல்லாச்சமூகங்களுமே சமூகமாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்ற வகையில் சமூகக்கட்டமைப்பிலும் அதன் கூறுகளான பண்பாடு சமூகநிறுவனங்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

சமூகமாற்றம் என்பது தனிமனிதர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தையோ ஒரு சிலர் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தையோ குறிப்பிடுவதில்லை. மாறாக அது முழுச்சமூதாயத்திலும் ஏற்படும் சமூக வாழ்க்கை மாற்றங்களைக் குறிப்பதாகும். சமூக மாற்றம் தொடர்ச்சியாக பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சமூகம் என்பது ஒன்றுக்கொன்று பல அமைப்பு முறைகளை உள்ளடக்கியது. இவற்றில் ஏதாவது ஒரு அமைப்பு முறையில் ஏற்படுகின்ற மாற்றம் தொடர்ச்சியாக பல அமைப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் அது அபிவிருத்திற்கும் வித்திடுகின்றன. இந்த வகையிலேயே இவ்வாய்வு காத்தான்குடி பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

காத்தான்குடி பிரதேசம் சமூக கட்டமைப்பு கூறுகளால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஒரு சமூகமாக காணப்படுகின்றது. இங்கு கட்டமைப்பு சார்ந்த பல்வேறு மாற்றங்கள் அண்மைக்காலமாக ஏற்பட்டு வருகின்றன. நவீனத்துவம் நகரமயமாக்கம் புதிய சிந்தனைகள் சனத்தொகை வளர்ச்சி என்பன போன்ற காரணிகள் காத்தான்குடியின் பாரம்பரிய சமூக கட்டமைப்பு சார்ந்து பல்வேறு மாற்றங்களை தோற்றுவித்துள்ளன. இந்த மாற்றங்கள் சமூக கட்டமைப்புக் கூறுகளான குடும்பம், சமயம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், வெகுசனதொடர்பாடல், அரசியல் என்பன சமூக நிறுவனங்களின் மாற்றங்களை தோற்றுவிக்கின்றன. காத்தான்குடி பிரதேசத்தை பொறுத்தவரையில் சமூக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்தும்வகையிலும் சமூகத்தில் புதிய சவால்களை தோற்றுவிக்கும் வகையிலும் அமைந்துள்ளன. பல்வேறு துறை சார்ந்து விரைவான அபிவிருத்திக்கு உற்பட்டு வரும் ஒரு பிரதேசத்தில் இவ்வாறான விளைவுகள் சமூக கட்டமைப்பு கூறுகளில் வெளிப்படுத்தும் என்பதனை விளங்கிக் கொள்வதற்கு இவ் ஆய்வு பயன்படும் எனலாம். விரைவான மாற்றங்கள் ஏற்பட்டு வரும் ஒரு சமூகத்தில் சமூக கட்டமைப்பு ரீதியாக எதிர்நோக்கக்கூடிய சவால்களை இனம்கண்டு அவற்றுக்கு பொருத்தமான செயற்திட்டங்களை பின்பற்றி இந்த மாற்றங்களை எவ்வாறு அபிவிருத்தி இலக்கை நோக்கியதாக திருப்பி விடமுடிம் என்பதற்கான முயற்சியாகவும் இவ் ஆய்வு

அமைந்துள்ளது. அத்துடன் காத்தான்குடி பிரதேசத்தை இத்தலைப்புடன் தொடர்புபடுத்தி எந்தவொரு ஆய்வும் இதுவரை இடம் பெற வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது மேலும் இவ் ஆய்வானது காத்தான்குடி பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைந்த போதிலும் இவ் ஆய்வினை மாதிரியாகக் கொண்டு ஏனைய பிரதேசத்தை மையப்படுத்தி ஆய்வினை மேற்கொள்வதற்கு இவ்வாய்வு ஒரு மாதிரியாக அமையும் என குறிப்பிடலாம்.

**ஆய்வின் நோக்கங்கள்**

01. சமூக கட்டமைப்பு அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனம்காணல்
02. இம்மாற்றங்கள் எத்தகைய தன்மைகளை தோற்றுவித்துள்ளன என்பதனை கண்டறிதல்
03. சமூக கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை எவ்வாறு அபிவிருத்தி நோக்கியதாக திட்டமிடுதல் போன்ற முன்மொழிவுகளை முன்வைத்தல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு விவரண ரீதியான (Discreptive Research) ஆய்வாக அமைந்துள்ளது. இம் முறை தரவுகளை திரட்டவதற்கான உத்திகளையும் வழி முறைகளையும் பயன்படுத்தவதற்கு உதவுவதுடன் கள ஆய்வு முறைக்கும் திரட்டப்பட்ட தரவுகளை பகுப்பாய்வுக்கு உற்படுத்துவதற்கும் பொருத்தமான ஆய்வு முறையாக காணப்படுகின்றது. இவ் ஆய்வில் முதன் நிலைத்தரவுகளை சேகரிப்பதற்காக அவதானம் (ழடிளநசஎயவழைெ) நேர்காணல் (Interview) வினாக்கொத்து (Questionair) ஆகிய முறைகள் கையாளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக கச்சேரி பிரதேச செயலகம், நகர சபை, பிரதேச கல்விக் காரியாலயம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், கிராம சேவகர், சமுர்த்தி ஊக்குவிப்பாளர் ஆவணங்களில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றில் இருந்தும் பெறப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட சமூக கட்டமைப்பு மாற்றங்களினால் உண்டான அல்லது சமூக கட்டமைப்பு கூறுகளில் அபிவிருத்திக்கு தடையாக உள்ள அதனை தாமதப்படுத்துகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இவ்வாய்வின் மூலமாக முன்வைக்கக்கூடியதாக உள்ளன. இங்கு முன் வைக்கப்படுகின்ற முன்மொழிவுகளை திட்டமிட்ட அடிப்படையில் அவற்றினை நிவர்த்தி செய்வதன் மூலமாக இப் பிரதேச சமூக மாற்றத்தை சமூக கட்டமைப்புக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையிலும் முன்னேற்ற கரமான அபிவிருத்தி பாதையிலும் வழிநடத்த முடியும் எனலாம்.

01. சமூக முரண்பாட்டினை தீர்த்து சுமூகமான சூழ்நிலையினை உருவாக்குதல்
02. கல்வித்துறையில் மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல் பெண்கள் கல்வியை ஊக்குவித்தல் சூழல் மாசடைவுகள் மற்றும் சுகாதார பிரச்சினைகளை தீர்த்தல்
03. மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி பொறுப்புணர்ச்சியினை ஏற்படுத்துதல்
04. பொருளாதார ரீதியான தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்
05. அரசியல் பிளவுகளை நீக்குதலும் பிரதேச அபிவிருத்தியின் பொருட்டு ஒருங்கினைத்தலும்.